WEB COPY



IN THE HIGH COURT OF JUDICATURE AT MADRAS

RESERVED ON: 16.05.2025
PRONOUNCED ON: 21.05.2025

CORAM

THE HONOURABLE MR.JUSTICE M.NIRMAL KUMAR

Crl.O.P.No.15442 of 2025

R.Abirami ... Petitioner

Vs.

1.The Superintendent of Police,
Thiruvallur District, Thiruvallur.

2.The Assistant Superintendent of Police,
CBCID, Chennai.

3.The Deputy Superintendent of Police,
DCB – Thiruvallur,
Thiruvallur District.

4.The Sub-Inspector of Police,
DCB – Thiruvallur,
Thiruvalllur District. ... Respondents

PRAYER: Criminal Original Petition is filed under Section 528 of BNSS, to set aside the closure report dated 16.04.2025 and transfer the investigation from the file of the 3rd and 4th respondents to the second respondent/CBCID to take necessary legal action against the culprits of the complaint dated 13.05.2025.



https://www.mhc.tn.gov.in/judis

WEB COPY



| | | |
|---|---|---|
| For Petitioner | : | Mr.M.D.Ilayaraja |
| For Respondents | : | Mr.R.Vinoth Raja<br>Government Advocate (Crl. Side) |

ORDER

This Criminal Original Petition is filed to set aside the closure report dated 16.04.2025 and transfer the investigation from the file of the 3rd and 4th respondents to the second respondent/CBCID to take necessary legal action against the culprits of the complaint dated 13.05.2025.

2.The contention of the learned counsel for the petitioner is that the petitioner as complainant lodged a complaint against one Vignesh, his wife Sindhiya and her sister Sangeetha and one Sridhar, who all in a deceitful manner induced the petitioner and her sister to avail personal loan by making arrangements in various Banks through their contacts and forced them to avail personal loan to the tune of Rs.60 lakhs each. These loans were handled by them by transferring to various accounts and thereby cheated and misappropriated to the tune of Rs.1,35,41,504/-, for which, the petitioner lodged a complaint to the District Crime Branch, Tiruvallur. The respondents 3 and 4 conducted enquiry, the petitioner produced all the



https://www.mhc.tn.gov.in/judis

WEB COPY



relevant document, failed to consider the documents and ignoring the same, the respondents 3 and 4 closed the case as civil in nature. When the petitioner requested the respondents 3 and 4 as to why the complaint was closed as civil in nature, no answer was given but the petitioner was chased away and further, they made derogative comments and remarks against the petitioner. The petitioner apprehends that the respondents 3 and 4 were in collusive with the named accused persons in the complaint and closed the complaint as civil in nature which is fortified for the reason that the named accused claimed that they hail from the same place of Superintendent of Police who is well known to them. Thereafter, the petitioner made to run from pillar to post, knocking the doors of all concerned seeking justice. On 30.04.2025, the petitioner sent a representation to the Director General of Police against the accused persons as well as the respondents 3 and 4 for being collusive with them. This complaint was forwarded to the Superintendent of Police in C.No.542/2025 but thereafter to, no action taken.

3.In the meanwhile, due to the inaction of the Police the petitioner attempted suicide by hanging herself. By the timely intervention of the



https://www.mhc.tn.gov.in/judis

WEB COPY



family members and neighbours, the petitioner rushed to Government Medical College and Hospital, Tiruvallur. Thereafter, information was sent to the Manavalanagar Police Station, who had come to the hospital, enquired with the Doctor, finding the petitioner's chances of survival is bleak, a requisition was made to the learned Judicial Magistrate for recording dying declaration on 11.04.2025. On receipt of the information, the learned Judicial Magistrate in the presence of the duty Doctor Harikumar recorded the dying declaration, the petitioner narrated the sufferings she had undergone at the hands of Vignesh, Sindhiya, Sangeetha and Sridhar, the improper manner in which the enquiry conducted by the Sub-Inspector of Police and the Deputy Superintendent of Police, District Crime Branch. The dying declaration commenced at 8.15 p.m. and completed at 9.45 p.m. The Manavalanagar Police to save themselves had shown as though the complaint was received on 11.04.2025 at 13.20 hours and C.S.R.No.373 of 2025 assigned. Presently, the petitioner received information to her mobile that C.S.R.No.373 of 2025 was closed as action dropped. On coming to know about the petitioner's attempt to commit suicide, in a hasty manner the District Crime Branch closed the complaint of the petitioner as civil in nature by report dated 16.04.2025 of the Sub-Inspector of Police and a report



https://www.mhc.tn.gov.in/judis

WEB COPY



dated 17.04.2025 by the Deputy Superintendent of Police, District Crime Branch. Now C.S.R.No.373 of 2025 also closed despite dying declaration recorded by the Judicial Magistrate. Thus, the action of the Police both by the District Crime Branch and Manavalanagar Police are not in accordance with law and further, the petitioner made specific complaint against Sub-Inspector of Police and Deputy Superintendent of Police, District Crime Branch for their inaction and for being complaisant with the accused person. Hence filed this petition seeking transfer of investigation to an independent agency, namely, the second respondent.

4.The learned Government Advocate (Crl. Side) on getting instructions from the District Crime Branch produced the closure report of the Deputy Superintendent of Police, District Crime Branch, Tiruvallur dated 17.04.2025 and a scanned reproduction of the same is as follows:



https://www.mhc.tn.gov.in/judis

WEB COPY



## விசாரணை அறிக்கை மற்றும் முடிவு

**C.No.03/DSP/DCB/TVLR/2025 Dt: 23.01.2025**

| | | |
|---|---|---|
| 1. மனுதாரர் | : | R. அபிராமி வ/23, க/பெ N.D. ராஜேஷ், த/பெ துரை, பிளாட் எண் : 304, அழகிரி தெரு, கபிலர் நகர், மணவாள நகர், திருவள்ளூர். செல்: 8838089514. |
| எதிர்மனுதாரர் | : | 1.விக்னேஷ், எண்: 637, A பவானி நகர், சாலமங்களம், படப்பை, காஞ்சிபுரம்.<br>2.சிந்தியா க/பெ. விக்னேஷ்,இருவரும் எண்: 637, A பவானி நகர், சாலமங்களம், படப்பை, காஞ்சிபுரம். |
| மனுவின் சுருக்கம் | : | மனுதாரர் அபிராமி என்பவரின் கணவர் ராஜேஷ் என்பவர் ஸ்ரீபெரும்பத்தூரில் உள்ள J.K. Tyres என்ற தனியார் கம்பெனியில் வேலை செய்து வருவதாகவும், இதற்கிடையில் அவருடன் வேலை செய்து வந்த எதிர்மனுதாரர் விக்னேஷ் என்பவர் அறிமுகமாகிறார். அப்போது விக்னேஷ் என்பவர் ஷேர்மார்க்கெட்டில் டிரேடிங் செய்து வருவதாகவும் அதில் பணம் செலுத்தினால் அதற்கு வட்டியாக அதிக லாபம் பெறலாம் என்று கூறியுள்ளார். அதனால் மனுதாரரின் கணவர் ராஜேஷ் ஷேர் மார்க்கட்டில் தானும் சேர்ந்து டிரேடிங் செய்து அதிக லாபம் பெறலாம் என்ற எண்ணத்தில், மேற்படி ஷேர்மார்க்கட்டில் அபிராமியின் கணவர் அவரது பெயரில் பர்சனல் லோனாக ரூ.60,00,000/- கடனாக பெற்று எதிர்மனுதாரரான விக்னேஷ் மனைவி சிந்தியா என்பவரின் பெயரில் உள்ள வங்கி கணக்கிற்கு பணத்தை அனுப்பியுள்ளார். இந்நிலையில் இருதரப்பினர்களுக்கும் பணப்பரிவர்த்தனை நடைபெற்று தற்போது நிறுத்தப்பட்ட நிலையில் மனுதாரர் அபிராமி என்பவர் மாதாமாதம் EMI பணம் கட்டமுடியவில்லை என்றும், தான் எதிர்மனுதாரர்களுக்கு கொடுக்க வாங்கிய இரண்டு பர்சனல் லோன்களையும், தங்களால் கட்ட முடியவில்லை என்றும் தங்களுக்கு இதனால் மிகுந்த மனஉளைச்சல் ஏற்பட்டுள்ளதாகவும், எனவே மேற்படி பணத்தினை எதிர்மனுதாரர்களிடமிருந்து பெற்றுத்தருமாறு புகார் மனு அளித்துள்ளார். |
| விசாரணை அதிகாரி | : | காவல்துணை கண்காணிப்பாளர்<br>மாவட்ட குற்றப்பிரிவு,<br>திருவள்ளூர் மாவட்டம். |
| விசாரணை அறிக்கை | : | மனுதாரர்களான அபிராமி மற்றும் கல்பனா ஆகிய இருவரும் உடன்பிறந்த சகோதரிகள் ஆவார்கள் மேற்படி அபிராமி என்பவரின் கணவர் ராஜேஷ் என்பவர் ஸ்ரீபெரும்பத்தூரில் உள்ள J.K. Tyres என்ற தனியார் கம்பெனியில் வேலை செய்து வருவதாகவும், அவருடன் வேலை செய்து வந்த எதிர்மனுதாரர் விக்னேஷ் என்பவர் அறிமுகமாகிறார். இதற்கிடையில் விக்னேஷ் என்பவர் ஷேர்மார்க்கெட்டில் டிரேடிங் செய்து வருவதாகவும் அதில் பணம் செலுத்தினால் அதற்கு வட்டியாக அதிக லாபம் பெறலாம் என்று கூறியுள்ளார். அதனால் மனுதாரரின் கணவர் ராஜேஷ் ஷேர் மார்க்கட்டில் தானும் சேர்ந்து டிரேடிங் செய்து அதிக லாபம் பெறலாம் என்ற எண்ணத்தில், மேற்படி ஷேர்மார்க்கட்டில் அபிராமியின் கணவர் அவரது பெயரில் பர்சலன் லோனாக ரூ.60,00,000/- கடனாக பெற்று எதிர்மனுதாரரான விக்னேஷ் மனைவி சிந்தியா என்பவரின் பெயரில் உள்ள வங்கி கணக்கிற்கு பணத்தை அனுப்பியுள்ளார்.<br><br>மேலும் மற்றொரு மனுதாரரான அபிராமியின் சகோதரி கல்பனா என்பவரும் அதேபோல் டிரேடிங் செய்து அதிக லாபம் பெறலாம் என்று எதிர்மனுதாரர்களான விக்னேஷ் மற்றும் அவரது மனைவி சிந்தியா ஆகியோர்கள் கல்பனாவிடம் கேட்டுக்கொண்டதின் பேரில் மனுதாரரான |



https://www.mhc.tn.gov.in/judis

WEB COPY



கல்பனா என்பவர் தனது பெயரில் பர்சனல் லோன் ரூ. 59,80,000/- த்தை கடன் பெற்று எதிர்மனுதாரரான சிந்தியா என்பவரின் பெயரில் உள்ள வங்கி கணக்கிற்கு பணத்தை அனுப்பியுள்ளார்.

அதனை தொடர்ந்து இருமனுதாரர்களுக்கும் டிரேடிங்கில் முதலீடு செய்த பணத்திற்கு ஈடாக கடந்த 2022 ஆம் ஆண்டு முதல் 2024 ஆம் ஆண்டு வரை எதிர்மனுதாரர்கள் அவர்களுடைய வங்கி கணக்குகளில் இருந்து மனுதாரர்கள் வங்கி கணக்கிற்கு பணம் பரிமாற்றம் செய்யப்பட்டுள்ளது என்று வங்கி கணக்கு பணப்பரிவர்த்தனை மூலம் தெரிய வருகிறது. இந்நிலையில் எதிர்மனுதாரர்கள் மனுதாரர்களுக்கு கொடுத்து வந்த பண பரிமாற்றம் நிறுத்தப்பட்டுள்ளது. அதனால் மனுதாரர்கள் இருவரும் டிரேடிங்கில் முதலீடு செய்ய வாங்கிய இரண்டு பர்சனல் லோன்களையும், தங்களால் கட்ட முடியவில்லை என்றும், தங்களால் மாதாமாதம் EMI பணம் கட்டமுடியவில்லை என்றும், இதனால் மிகுந்த மனஉளைச்சல் ஏற்பட்டுள்ளதாகவும் விசாரணையில் தெரிவித்து மேற்படி விசாரணையில் தங்களுக்குள் நடைபெற்ற பண பரிமாற்றம் தொடர்பான ஆவணங்களை சமர்ப்பித்தார்கள்.

**விசாரணை முடிவு** :

இந்நடப்புத்தாள் சம்மந்தமாக இருதரப்பினரையும் மாவட்ட குற்றப்பிரிவு அலுவலகத்தில் நேரில் அழைத்து விசாரணை செய்யப்பட்டது. விசாரணையில் மனுதாரர்கள் அபிராமி மற்றும் கல்பனா இருவரும் 100 ரூபாய்க்கு ரு.10 சதவீதம் வட்டிக்கு ஆசைப்பட்டு சுயவிருப்பத்தின் பேரில் கடந்த 2022 ஆம் ஆண்டு முதல் 2024 ஆம் ஆண்டு வரை மனுதாரர்கள் பல வங்கிகள் மூலமாக ரூ.1,35,41,504/- பணத்தை பெற்று டிரேடிங் மார்க்கெட்டில் முதலீடு செய்ய எதிர் மனுதாராகளான விக்னேஷ் மற்றும் அவரது மனைவி சிந்தியா ஆகியோர்கள் வங்கி கணக்கிற்கு பணம் அனுப்பியுள்ளார்கள். இதற்கிடையில் எதிர்மனுதாரர்களின் வங்கி கணக்கு பணப்பரிவர்த்தனையும், மனுதாரர்களுடைய வங்கி கணக்கு பணப்பரிவர்த்தனையும் ஆராய்ந்து பார்த்ததில் மனுதாரர்கள் அவர்களுடைய வங்கி கணக்கு மூலமாக அளித்த பணம் ரூபாய் 1,35,41,504/- ஆகும். எதிர்மனுதாரர்கள் இருமனுதாரர்களின் வங்கி கணக்கிற்கு அனுப்பிய ரூ.1,36,31,080/- ஆகும்.

எனவே இருதரப்பினர்களும் சுயவிருப்பத்தின் பேரில் அதிக லாபம் ஈட்ட வேண்டும் என்ற நோக்கத்தில், 100 ரூபாய்க்கு ரு.10 சதவீதம் வட்டிக்கு ஆசைப்பட்டு பணத்தை ஷேர் மார்க்கெட்டில் முதலீடு செய்துள்ளார்கள். அதனால் பணபரிவர்த்தனைகள் கொடுக்கல் வாங்கல் பிரச்சனைகள் அனைத்தும் சிவில் சம்மந்தப்பட்டவை என்பதால் 15.04.2025 ந் தேதி அரசு வழக்கறிஞர் மூலம் சட்ட கருத்துரை பெற்றதில் இது சிவில் சம்மந்தப்பட்ட பிரச்சனை என்று தனது கருத்துரையில் தெரிவித்துள்ளார். அதனால் இருதரப்பினரும் உரிய நீதிமன்றத்தை அணுகி பிரச்சனை தீர்த்துக் கொள்ளுமாறு இருதரப்பினருக்கும் அறிவுறுத்தி இம்மனுவானது முடிக்கப்பட்டு கோர்வை செய்யப்படுகிறது.

காவல் துணை கண்காணிப்பாளர்,
மாவட்ட குற்றப்பிரிவு,
திருவள்ளூர் மாவட்டம்.
17.04.2025



https://www.mhc.tn.gov.in/judis

WEB COPY



5.Further, the learned Government Advocate (Crl. Side) also produced the report of the Additional Commissioner, Cyber Crime, Tiruvallur dated 15.05.2025 and a scanned reproduction of the same is as follows:



https://www.mhc.tn.gov.in/judis

WEB COPY



**காவல் துறை**

| விடுநர்: | பெறுநர்: |
|---|---|
| வ. கலியன்,<br>கூடுதல் காவல் கண்காணிப்பாளர்,<br>இணையவழி குற்றப்பிரிவு,<br>திருவள்ளூர் மாவட்டம். | காவல் கண்காணிப்பாளர் அவர்கள்,<br>திருவள்ளூர் மாவட்டம்,<br>திருவள்ளூர். |
| ந.க.எண். 40/கூ.கா.க/இ.கு/திரு/2025 | நாள்: 15.05.2025 |

அய்யா,

பொருள்: திருவள்ளூர் மாவட்டம் - திருமதி. அபிராமி க/பெ ராஜேஸ், முல்லை தெரு. கபிலர் நகர், மணவாளநகர் என்பவர் அளித்த புகார் மனுவின் மீது விசாரணை செய்து அறிக்கை சமர்பித்தல் - தொடர்பாக.

பார்வை: C.No.G3/179/10373139/SP/TVLR/2025 dt.06.05.2025

<<<>>>

இப்புகார் மனு தொடர்பாக மனுதாரர் திருமதி. அபிராமி க/பெ லட்சுமணன், எண்.7, முல்லை தெரு, கபிலர் நகர், திருவள்ளூர் என்பவரிடம் விசாரணை செய்ததில், தான் மேற்கண்ட முகவரியில் இரு குழந்தைகள் மற்றும் கணவருடன் வசித்து வருவதாகவும், மார்ச் மாதம் இறுதியில் SP அலுவலகம், CCB பிரிவில் தான் விசாரணைக்கு வந்தததாகவும், அப்போது எதிர் தரப்பினர் கூறுவதை மட்டுமே ஒரு தலைப்பட்சமாக கேட்டு கொண்டு தங்களை கூறுவதை மட்டுமே சரி என்று DSP சுரேஷ்பாபு ஐயா அவர்களும், காந்திமதி SI அவர்களும் கூறி அதிகமாக பேசினால் கந்து வட்டி கேட்டிங்கனு உன் மேலையும், உன் கணவர் மேலையும் FIR போட்டு உள்ள தள்ளிடுவேன் எங்க Section ல இருக்க எல்லாரையும் விக்னேஷ், சந்தியா விசாரிக்க வேண்டிய விதத்துல விசாரிச்சிட்டாங்க நீ என்ன குடுத்த எனக்கு சொல்லு என்று பேசினார்கள் தான் ஏப்ரல் 11-ம் தேதி விக்னேஷ், சிந்தியா, சூரியா ஆகியோர் தன்னை ஏமாற்றி பணம் மோசடி செய்ததை தெரிந்தும் காவல் துறையினர் நடவடிக்கை எடுக்காததால் மன வேதனையடைந்து தூக்கிட்டு தற்கொலை முயற்சி செய்ததாகவும், கழுத்தில் தழும்புகளோடு மீண்டும் விசாரணைக்கு வந்த போதும் தனக்கு நியாயம் கிடைக்காமல் மூடல் அறிக்கை கொடுத்ததாகவும், தயவு செய்து தன்னுடைய 62 லட்சத்தை விக்னேஷ், சிந்தியா மற்றும் சூரியாவிடம் தீர விசாரணை செய்து வாங்கி தருமாறு தனது வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளார்.

திரு. சுரேஷ்பாபு, காவல் துணை கண்காணிப்பாளர், மாவட்ட குற்றப்பிரிவு, திருவள்ளூர் மாவட்டம் என்பவரிடம் விசாரணை செய்ததில், தான் திருவள்ளூர் மாவட்ட குற்றப்பிரிவில் சுமார் இரண்டு வருடங்களாக பணிபுரிந்து வருவதாகவும், கடந்த 23.01.2025-ம் தேதி காவல்



https://www.mhc.tn.gov.in/judis

WEB COPY



கண்காணிப்பாளர், திருவள்ளூர் மாவட்டம் அவர்களிடம் திருமதி. அபிராமி மற்றும் R.கல்பனா ஆகியோர்கள் இருவரும் சகோதரிகள் அவர்கள் அளித்த புகார் மனுவின் மீது நடப்புதாள் எண் குறியிட்டு 1. EUA25034958, 2. EUK25034944 என குறிப்பிட்டு அனுப்பட்டுள்ளது. திருமதி. அபிராமி மற்றும் R.கல்பனா என்பவர்கள் அளித்த புகார் மனுவில் திரு. விக்னேஷ் மற்றும் அவரது மனைவி திருமதி. சிந்தியா ஆகியோர் சேர்ந்து Share Market ல் பணத்தினை போட்டு அதற்கு அதிகமாக ரூபாய் 8 முதல் 10 Percentage வரை கூடுதலாக பணம் கிடைக்கும் என்று ஆசை வார்த்தைகளை கூறி பல வங்கியில் கடன் வாங்கி பணத்தை எதிர்மனுதாரர்களின் வங்கி கணக்கில் திருமதி. அபிராமி என்பவர் ரூ. 60,00,000/-இலட்சமும், R. கல்பனா ரூ. 56,00,000/-இலட்சமும் அளித்ததாகவும், அவ்வாறு பெற்று கொண்ட எதிர்மனுதாரர்கள் Share Market ல் முதலீடு செய்ததில் பணம் சரியாக வரவில்லை என்பதால், மனுதாரர் அளித்த பணத்தினை, எதிர்மனுதாரரிடம் சென்று கேட்ட போது பணத்தினை சீக்கிரமாக கொடுப்பதாக கால அவகாசம் வாங்கி கொண்டு பின்னர் குறித்த நேரத்தில் பணத்தினை அளிக்கவில்லை என்று தனது புகார் மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது. அவ்வாறு அளிக்கப்பட்ட புகார் மனுவின் மீது கடந்த 30.01.2025-ம் தேதியன்று மாவட்ட குற்றப்பிரிவு, காவல் துணை கண்காணிப்பாளர் அவர்களால் மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர்கள் இருவரிடமும் நேரிடையாக விசாரணை செய்யப்பட்டுள்ளது. பின்னர் இருதரப்பினரிடமும் உள்ள ஆவணங்களை அடுத்த விசாரணைக்கு 18.02.2025-ந் தேதியன்று கொண்டு வருமாறு எழுதி வாங்கி கொண்டு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. பின்னர் இப்புகார் மனு தொடர்பாக கூடுதல் அமர்வு நீதிமன்ற, அரசு வழக்கறிஞரின் கருத்துருவை கடந்த 15.04.2025-ந் தேதி அளித்த கருத்துருவில் CIVIL IN NATURE என்று குறிப்பிட்டுள்ளார். அதனடிப்படையில் கடந்த 16.04.2025-ம் தேதியன்று மனுதாரர் திருமதி. அபிராமி மற்றும் R.கல்பனா ஆகியோர்களுக்கு பதிவு தபால் மூலம் தாங்கள் அளித்த புகார் மனுக்களை CIVIL IN NATURE என குறிப்பிட்டும், தாங்கள் அளித்த புகார் மனு மீதான பிரச்சனையை உரிமையியல் நீதிமன்றத்தில் முறையிட்டு நிவாரணம் தேடிக்கொள்ளுமாறு விசாரணை செய்த விவரத்தை கடிதம் அனுப்பி வைத்து இந்த மனு மீதான விசாரணை முடிக்கப்பட்டதாகவும், இந்நிலையில் மனுதாரர்கள் தரப்பில் கனம் காவல் துறை இயக்குநர் அவர்களிடம் அளித்துள்ள புகாரில் அவர்களை தரக்குறைவான வார்த்தைகளால் திட்டியதாக, ஒரு பொய்யான சங்கதிகளை குறிப்பிட்டு புகாரில் தெரிவித்துள்ளார்கள் என்று தனது வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளார்.

திருமதி. காந்திமதி, சிறப்பு காவல் உதவி ஆய்வாளர், மாவட்ட குற்றப்பிரிவு, திருவள்ளூர் மாவட்டம் என்பவரிடம் விசாரணை செய்ததில், தான் தமிழ்நாடு காவல் துறையில்



https://www.mhc.tn.gov.in/judis

WEB COPY



1997-ம் ஆண்டு இரண்டாம் நிலை பெண் காவலராக பணிக்கு தாக்கலாகி தற்போது திருவள்ளூர் மாவட்ட குற்றபிரிவில் சுமார் 1 ½ ஆண்டுகளாக சிறப்பு காவல் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருவதாகவும், கடந்த 23.01.2025-ம் தேதி காவல் கண்காணிப்பாளர், திருவள்ளூர் மாவட்டம் அவர்களிடம் திருமதி. அபிராமி மற்றும் R.கல்பனா ஆகியோர்கள் இருவரும் சகோதரிகள் அவர்கள் அளித்த புகார் மனுவின் மீது நடப்புதாள் எண் குறியிட்டு 1. EUA25034958, 2. EUK25034944 என குறிப்பிட்டு அனுப்பட்டுள்ளது. திருமதி. அபிராமி மற்றும் R.கல்பனா என்பவர்கள் அளித்த புகார் மனுவில் திரு. விக்னேஷ் மற்றும் அவரது மனைவி திருமதி. சிந்தியா ஆகியோர் சேர்ந்து Share Market ல் பணத்தினை போட்டு அதற்கு அதிகமாக ரூபாய் 8 முதல் 10 Percentage வரை கூடுதலாக பணம் கிடைக்கும் என்று ஆசை வார்த்தைகளை கூறி பல வங்கியில் கடன் வாங்கி பணத்தை எதிர்மனுதாரர்களின் வங்கி கணக்கில் திருமதி. அபிராமி என்பவர் ரூ. 60,00,000/-இலட்சமும், R. கல்பனா ரூ. 56,00,000/-இலட்சமும் அளித்ததாகவும், அவ்வாறு பெற்று கொண்ட எதிர்மனுதாரர்கள் Share Market ல் முதலீடு செய்ததில் பணம் சரியாக வரவில்லை என்பதால், மனுதாரர் அளித்த பணத்தினை, எதிர்மனுதாரரிடம் சென்று கேட்ட போது பணத்தினை சீக்கிரமாக கொடுப்பதாக கால அவகாசம் வாங்கி கொண்டு பின்னர் குறித்த நேரத்தில் பணத்தினை அளிக்கவில்லை என்று தனது புகார் மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது. அவ்வாறு அளிக்கப்பட்ட புகார் மனுவின் மீது கடந்த 30.01.2025-ம் தேதியன்று மாவட்ட குற்றப்பிரிவு, காவல் துணை கண்காணிப்பாளர் அவர்களால் மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர்கள் இருவரிடமும் நேரிடையாக விசாரணை செய்யப்பட்டுள்ளது. பின்னர் இருதரப்பினரிடமும் உள்ள ஆவணங்களை அடுத்த விசாரணைக்கு 18.02.2025-ந் தேதியன்று கொண்டு வருமாறு எழுதி வாங்கி கொண்டு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் மனுதாரர்கள் தரப்பில் கனம் காவல் துறை இயக்குநர் அவர்களிடம் அளித்துள்ள புகாரில் அவர்களை தரக்குறைவான வார்த்தைகளால் திட்டியதாக, ஒரு பொய்யான சங்கதிகளை குறிப்பிட்டு புகாரில் தெரிவித்துள்ளார்கள் என்று தனது வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளார்.

திருமதி. கலைச்செல்வி, பெ.மு.நி.கா. 543, மாவட்ட குற்றப்பிரிவு, திருவள்ளூர் மாவட்டம் என்பவரிடம் விசாரணை செய்ததில், தான் கடந்த 19.03.2025-ம் தேதி முதல் மாவட்ட குற்றப்பிரிவில் பணிபுரிந்து வருவதாகவும், தான் மாவட்ட குற்றப்பிரிவில் CCTNS பணி செய்து வருவதாகவும், மனுதாரர் அபிராமி, கல்பனா மனு சம்மந்தமான விசாரணை மாவட்ட குற்றப்பிரிவில் காவல் துணை கண்காணிப்பாளர் அய்யா அவர்களின் தலைமையில் நடைபெற்றதாகவும், தான் விசாரணையின் போது நிலைய ஆஜரில் இருந்ததாகவும், மனுதாரர் பெண் என்பதால் விசாரணையின் போது உடன் இருக்குமாறு குற்றப்பிரிவு எழுத்தர் சிறப்பு



https://www.mhc.tn.gov.in/judis

WEB COPY



காவல் உதவி ஆய்வாளர் திருமதி. காந்திமதி அவர்களும் விசாரணையின் போது காவல் துணை கண்காணிப்பாளர் அவர்களுடன் இருந்ததாகவும், மேலும் காவல் துணை கண்காணிப்பாளர் அய்யாவோ அல்லது சிறப்பு காவல் உதவி ஆய்வாளர் திருமதி. காந்திமதி அவர்களோ மனுதாரர் அபிராமியை மிரட்டவோ அல்லது தவறாகவோ பேசவில்லை என்றும், மேலும் மனுதாரர் அபிராமி வெளியில் வந்து தங்களிடம் எதுவும் தெரிவிக்கவில்லை என்று தனது வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளார்.

திரு. சிவா, த.கா. 3681, மாவட்ட குற்றப்பிரிவு, திருவள்ளூர் மாவட்டம் என்பவரிடம் விசாரணை செய்ததில் தான் கடந்த 11.03.2025-ந் தேதி திருவள்ளூர் மாவட்ட குற்றப்பிரிவில் அறிக்கை செய்து கொண்டு வழக்கு கோப்புகளை தயார் செய்யும் பணியை செய்து வருவதாகவம், மனுதாரர்கள் அபிராமி, கல்பனா மனு சம்மந்தமாக விசாரணை மாவட்ட குற்றப்பிரிவு, காவல் துணை கண்காணிப்பாளர் அய்யா அவர்களின் தலைமையில் நடைபெற்றதாகவும், விசாரணை நடைபெற்ற போது தான் அலுவலகத்தில் இருந்ததாகவும், மனுதாரர்கள் பெண்கள் என்பதால் மனு விசாரணையின் போது அலுவலகத்தில் ஆஜரில் இருந்த சிறப்பு காவல் உதவி ஆயவாளர் திருமதி. காந்திமதி மற்றும் பெ.மு.நி.கா.543 திருமதி. கலைச்செல்வி ஆகியோர்கள் விசாரணையின் போது உடன் இருந்தார்கள் தானும் உடன் இருந்ததாகவும், மனுதாரரான அபிராமி மற்றும் கல்பனா என்பவர்களிடம் விசாரணையின் போது காவல் துணை கண்காணிப்பாளர் அய்யா அவர்களோ, சிறப்பு காவல் உதவி ஆய்வாளர் திருமதி. காந்திமதி அவர்களோ வேறு அலுவலகத்தில் இருந்த காவலர்கள் யாரும் மனுதாரர்களை மிரட்டவோ அல்லது தவறான அவதூறான வார்த்தைகளால் எதுவும் மனுதாரர்களை பேசவில்லை மேலும் மனுதாரர் அபிராமி வெளியில் வந்து யாரிடமும் எதுவும் தெரிவிக்கவில்லை என்று தனது வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளார்.

திரு. பார்த்திபன், காவல் உதவி ஆய்வாளர், மணவாளநகர் காவல் நிலையம் என்பவரின் தனியறிக்கையில், தான் மணவாளநகர் காவல் நிலையத்தில் காவல் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருவதாகவும், கடந்த 11.04.2025-ம் தேதி மதியம் 13.00 மணியளவில் திருவள்ளூர் அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனையில் பெறப்பட்ட தகவலின் படி மருத்துவமனை சென்று அங்கு உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்த அபிராமி வ/24 க/பெ ராஜேஸ் எண். 7/A, முல்லை தெரு, கபிலர் நகர், மணவாளநகர், திருவள்ளூர் என்பவர் வீட்டில் தன்னை தானே புடவையில் மின் விசிறியில் தூக்கு மாட்டி கொண்டு இருந்தவரை அவரின் தாய் மற்றும் அங்கு இருந்தவர்கள் மீட்டு திருவள்ளூர் அரசு கல்லூரி மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருவதாகவம், விசாரணையில் அவரின் கணவர் ராஜேஸ் என்பவர் JK Tyers கம்பெனியில் வேலை செய்து வருவதாகவும், அவருடன் வேலை செய்யும் கணவரின் நண்பர் விக்னேஷ்



https://www.mhc.tn.gov.in/judis

WEB COPY



என்பவர் Trading நடத்தி வருவதாகவும், அதற்கு பணம் தேவைப்படுவதாக ஆசை வார்த்தை கூறி வங்கி மூலம் ரூ. 60,00,000/- லோன் வாங்கி கொடுத்ததாகவம், அவற்றினை லாபத்துடன் திருப்பி தருவதாக சொல்லி 2024-ம் ஆண்டு ஜீலை, ஆகஸ்ட், செப்டம்பர் மாதம் ரூ. 5,00,000/- வீதம் மொத்தம் ரூ. 15,00,000/- திருப்பி கொடுத்ததாகவும், மீதமுள்ள பணம் கேட்ட போது பணம் தராமல் ஏமாற்றியதால் ஜனவரி 2025-ம் மாதம் DCB திருவள்ளூரில் புகார் மனு அளித்தும் விசாரணை செய்து பணம் பெற்று தரவில்லை என்றும் தன் கணவரின் மாத சம்பளம் அனைத்தும் வங்கி லோன் பிடித்தம் செய்வதாகவும், இதனால் மன உடைந்து தூக்கிட்டு கொண்டதாகவும் தன்னை இந்த நிலைக்கு ஆளாக்கிய விகனேஷ், சிந்தியா, சங்கீதா மூவரின் மேல் நடவடிக்கை எடுக்குமாறு புகார் வாக்குமூலமாக பதிவு செய்யப்பட்டு மணவாளநகர் காவல் நிலையம் மனு ரசீது எண். 373/2025 வழங்கி நீதித்துறை நடுவர் Fast Track at Magistrate level, Thiruvallur மூலமாக மரண வாக்குமூலம் பதிவு செய்து விசாரணை செய்ததில் இப்புகார் மனு சம்மந்தமாக மாவட்ட குற்றப்பிரிவு துணை காவல் கண்காணிப்பாளர் அவர்கள் இருதரப்பினரையும் விசாரணை செய்ததில் மனுதாரரிடம், எதிர் மனுதாரர் பெற்ற ரூ. 1,35,41,504/-க்கு அதற்கு ஈடாக மனுதாரருக்கு எதிர் மனுதாரர் ரூ. 1,36,31,080/- திருப்பி வங்கி பரிவர்த்தனை மூலமாக கொடுத்து விட்டதாக தெரிய வரவே முறையாக அனைத்தும் சிவில் சம்மந்தப்பட்டவை என்பதால் 15.04.2025-ம் தேதி அரசு வழக்கறிஞர் மூலம் சட்ட கருத்துரை பெற்று மனுதராருக்கு 17.04.2025-ம் தேதி பதிவு தபால் மூலமாக உரிய சிவில் நீதிமன்றம் அணுகி நிவாரணம் தேடிக்கொள்ளுமாறு காவல் அறிவிப்பு அனுப்பப்பட்டுள்ளதால், இவ்விவரத்தினை மனுதாரருக்கு தெரியப்படுத்தி மணவாளநகர் காவல் நிலைய மனு ரசீது எண். 373/2025 விசாரணை முடிக்கப்பட்டதாக தனது தனியறிக்கையில் தெரிவித்துள்ளார்.

<u>விசாரணை முடிவு:</u>

கடந்த 11.04.2025-ம் தேதியன்று திருமதி. அபிராமி க/பெ ராஜேஸ் என்பவர் அரசு மருத்துவமனை, திருவள்ளூர் வான் செய்தியில் தற்கொலை முயற்சி செய்ததாக வரப்பட்ட மருத்துவமனை தகவலின் பேரில் மணவாளநகர் காவல் நிலையத்தில் மனு ரசீது எண். 373/2025-ன் படி பதிவு செய்யப்பட்டுள்ளது. அவ்வாறு பதிவு செய்யப்பட்ட மனு ரசீதின் மீது மரண வாக்குமூலம் அளிப்பதற்காக நீதித்துறை நடுவர், திருவள்ளூர் அவர்களுக்கு கடிதம் அளிக்கப்பட்டு அதன் பேரில் திருவள்ளூர் நீதித்துறை நடுவர் அவர்கள், திரு. பார்த்திபன், காவல் உதவி ஆய்வாளர், மணவாளநகர் காவல் நிலையம் என்பவரும், டாக்டர். அரிக்குமார்,T.V, என்பவர் முன்னிலையில் திருவள்ளூர், அரசு மருத்துவ கல்லூரி மருத்துவனையில் மரண வாக்குமூலம் 11.04.2025-ம் தேதி பதிவு செய்யப்பட்டுள்ளது. அந்த மரண வாக்குமூலத்தில் மனுதாரர் காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்தில் எதிர் மனுதாரர்கள்



https://www.mhc.tn.gov.in/judis

WEB COPY



தங்களுக்கு தரவேண்டிய பணத்தினை திருப்பி கொடுத்துவிட்டதாகவும், மேலும் வங்கயில் இருந்து பெறப்பட்ட பணத்திற்கு EMI கட்ட வேண்டும் என்று தொந்தரவு செய்ததாலும், மேலும் விக்னேஷ் என்பவர் அடியாட்களை வைத்து மிரட்டியதாகவும், விக்னேஷ், சிந்தியா மற்றும் சங்கீதா ஆகியோர்கள் தான் காரணம் என்றும், அவ்வாறு பெறப்பட்ட மரண வாக்குமூலத்தின் அடிப்படையில் மணவாளநகர் காவல் நிலையத்தில் மனு ரசீது எண். 373/2025-ன் வழங்கப்பட்ட மனுரசீதை இப்புகார் மனு சம்மந்தமாக ஏற்கனவே காவல் துணை கண்காணிப்பாளர், மாவட்ட குற்றப்பிரிவு, திருவள்ளூர் அவர்கள் இருதரப்பினரையும் அழைத்து விசாரணை செய்ததில் மனுதாரர் மற்றும் அவரின் சகோதரி கல்பனா எதிர் மனுதாரருக்கு கொடுத்து ரூ. 1,35,41,504/- பணத்திற்கு ஈடாக எதிர் மனுதாரர் ரூ. 1,36,31,080/- பணம் திருப்பி அளித்துள்ளதாக விசாரணையில் தெரியவருவதாகவும், மேலும் பணம் கொடுக்கல், வாங்கல் பிரச்சனை என்பவதால் சிவில் சம்மந்தப்பட்டவை என்பதால் 15.04.2025-ம் தேதி அரசு வழக்கறிஞரின் கருத்துரு பெற்று 17.04.2025-ம் தேதி பதிவு தபால் மூலமாக உரிய நீதிமன்றததை அணுகி நிவாரணம் தேடிக்கொள்ளுமாறு காவல் அறிவிப்பு அனுப்பி வைக்கப்பட்டதாக மனுரசீது முடித்து வைக்கப்பட்டுள்ளது.

இப்புகார் மனு தொடர்பாக மனுதாரரிடம் 09.05.2025-ம் தேதி விசாரணை செய்யப்பட்டது. அவ்விசாரணையின் போது திரு. சுரேஷ்பாபு, காவல் துணை கண்காணிப்பாளர், மாவட்ட குற்றப்பிரிவு, திருவள்ளூர் மாவட்டம் மற்றும் திருமதி. காந்திமதி, காவல் உதவி ஆய்வாளர் ஆகியோர்கள் விசாரணையின் போது மனுதாரரிடம் எதிர்மனுதாரர்கள் தங்களை பார்க்க வேண்டிய விதத்தில் பார்த்துவிட்டதாகவும், நீங்கள் என்ன செய்தீர்கள் எங்களுக்கு என்று கேட்டதாகவும், கந்து வட்டி வழக்கில் மனுதாரரையும், அவரது கணவர் மீதும் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துவிடுவேன் என்று மிரட்டியதாக DSP, SI ஆகியோர் தன்னை மிரட்டியதாக தன்னுடைய வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளார். இந்த சம்பவம் தொடர்பாக அன்றைய தினம் மாவட்ட குற்றப்பிரிவு, அலுவலகத்தில் பணியில் இருந்த திரு.சிவா, த.கா. 3681, திருமதி. கலைச்செல்வி, பெ.கா. 543 ஆகியோர்களிடம் விசாரணை செய்த போது மனுதாரர் மற்றும் அவரது சகோதரி பெண் என்பதால், காவல் துணை கண்காணிப்பாளர், விசாரணை செய்த போது அவருடன் திருமதி. காந்திமதி மற்றும் திருமதி. கலைச்செல்வி ஆகியோர் உடன் இருந்ததாகவும், அவ்விசாரணையின் போது மனுதாரரையும், அவரது சகோதரியையும் எந்தவிதமான மிரட்டவோ அல்லது தவறாகவோ அன்றைய தினம் அலுவலக பணியில் இருந்த திரு. சிவா, த.கா. 3681 என்பவரும் அலுவலகத்தில் பணியில் இருந்துள்ளார். மேலும் கடந்த 09.05.2025-ம் தேதி என்னுடைய விசாரணையின் போது மனுதாரரிடம் திரு. சுரேஷ்பாபு, காவல் துணை கண்காணிப்பாளர் மற்றும் திருமதி. காந்திமதி, காவல் உதவி



https://www.mhc.tn.gov.in/judis

WEB COPY

ஆய்வாளர் ஆகியோர் தங்களை மிரட்டும் போதோ அல்லது தவறாக பேசும் போதோ வேறு யாரேனும் தனிநபர்கள் இருந்தார்களா என்று கேட்டதற்கு அவ்வாறு வேறு யாரும் அங்கு இல்லை என்று மனுதாரர் தெரிவித்தார். அதன் பின்னர் தங்களை மேற்படி காவல் துறையினர் தங்களை மிரட்டியதற்கோ, தவறாகவோ பேசியதற்கோ ஏதேனும் ஆதாரம் உள்ளதா என்று கேட்ட போது எந்தவிதமான ஆதாராமோ மற்றும் ஆவணங்களோ தன்னிடம் இல்லை என்று விசாரணையின் போது தெரிவித்தார். திருமதி. அபிராமி என்பவரிடம் காவல் துணை கண்காணிப்பாளர் விசாரணை செய்த போது தனிநபர்கள் யாரும் இல்லை என்று தெரிவித்ததால் அவர்களிடம் விசாரணை செய்ய இயலவில்லை எனவே மாவட்ட குற்றப்பிரிவு, அலுவலகத்தில் பணியில் இருந்து காவலர்களிடம் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது. எனவே மனுதாரர் திருமதி. அபிராமி என்பவர் அளித்த புகார் மனுவின் மீது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யபடவில்லை என்பதால் இது போன்ற ஒரு புகார் மனுவினை உயர் அதிகாரிகளிடம் அளித்துள்ளார் என்பது விசாரணை செய்ததில் இருந்து தெரியவருகிறது. எனவே இப்புகார் மனுவின் மீது மேல் நடவடிக்கையின்றி கோர்வை செய்யலாம் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

15/5/2025

கூடுதல் காவல் கண்காணிப்பாளர்,
இணையவழி குற்றப்பிரிவு,
திருவள்ளூர் மாவட்டம்.

**இணைப்பு:**

1. திருமதி. அபிராமி க/பெ லட்சுமணன், எண்.7, முல்லை தெரு, கபிலர் நகர், திருவள்ளூர் என்பவரின் வாக்குமூலம்.
2. திரு. சுரேஷ்பாபு, காவல் துணை கண்காணிப்பாளர், மாவட்ட குற்றப்பிரிவு, திருவள்ளூர் மாவட்டம் என்பவரின் வாக்குமூலம்.
3. திருமதி. காந்திமதி, சிறப்பு காவல் உதவி ஆய்வாளர், மாவட்ட குற்றப்பிரிவு, திருவள்ளூர் மாவட்டம் என்பவரின் வாக்குமூலம்.
4. திருமதி. கலைச்செல்வி, பெ.மு.நி.கா. 543, மாவட்ட குற்றப்பிரிவு, திருவள்ளூர் மாவட்டம் என்பவரின் வாக்குமூலம்.
5. திரு. சிவா, த.கா. 3681, மாவட்ட குற்றப்பிரிவு, திருவள்ளூர் மாவட்டம் என்பவரின் வாக்குமூலம்.
6. திரு. பார்த்திபன், காவல் உதவி ஆய்வாளர், மணவாளநகர் காவல் நிலையம் என்பவரின் தனியறிக்கை.
7. 15.04.2025-ம் தேதியிட்ட அரசு வழக்கறிஞரின் கருத்துரு.
8. மணவாளநகர் காவல் நிலைய மனு ரசீது எண். 373/2025 மற்றும் அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனையில் நீதித்துறை நடுவரால் மரண வாக்குமூலம் பதிவு செய்யப்பட்ட நகல்.
9. புகார் மனு.



https://www.mhc.tn.gov.in/judis

WEB COPY



6.The learned Government Advocate (Crl. Side) further submitted that in this case, detailed enquiry conducted and it is found that the petitioner and her sister availed personal loan and given the money to Vignesh, Sindhiya and Sangeetha for investing the money in share market through an agent Sridhar. The said Vignesh and the petitioner's husband are working in JK Tyres and they were known to each other. It is the petitioner's greed for money to have short term income in the share market had given the money on her own and received share benefits. This was enquired with the petitioner and other persons with the relevant documents and found that the petitioner and her sister given the money to the tune of Rs.1,35,41,504/- and in return, they received Rs.1,36,31,080/-. He would submit that after getting legal opinion from the Government Pleader, the case was closed as civil in nature. He would further submit that the petitioner attempted to commit suicide by making allegations, a complaint received and C.S.R.No.373 of 2025 assigned by the Manavalanagar Police. Thereafter, the Manavalanagar Police took steps to record the dying declaration of the petitioner and the same was recorded by the learned Judicial Magistrate, from which, it is confirmed that the petitioner on her own invested the



https://www.mhc.tn.gov.in/judis

WEB COPY



money in the share market, now suffered loss, attempted to commit suicide and hence, the case closed as further action dropped. He further submitted that the complaint to the Director General of Police was initially forwarded to the Superintendent of Police which was again forwarded to the Additional Superintendent, Cyber Crime, who conducted enquiry, recorded the statement of the petitioner, Mr.Suresh Babu, Deputy Superintendent of Police, District Crime Branch, Tiruvallur, Mrs.E.Gandhimathi, Special Sub-Inspector of Police, District Crime Branch, Tiruvallur, Mrs.P.Kalaiselvi, Grade-I Constable, District Crime Branch, Mr.G.R.Siva, Head Constable, District Crime Branch, Mr.Parthiban, Sub-Inspector of Police, Manavalanagar Police Station and the legal opinion from one Mr.V.S.Eswaran, Pleader doing Government work, Additional District Munsif Court, Tiruvallur, C.S.R.No.373 of 2025 and after collecting all these documents and examining the concerned, had given a report on 15.05.2025. He further submitted that the petitioner having voluntarily invested in the share market, suffered a loss is making complaint after complaint to various authorities and attempts to give a criminal colour to the civil dispute and filed the present petition. He would further submit that if at all the petitioner had any grievance, she has to approach the Civil Court.



https://www.mhc.tn.gov.in/judis

WEB COPY



Hence, strongly opposed the petition.

7.This Court considered the rival submissions carefully and the typed set of papers produced by the petitioner and the learned Government Advocate (Crl. Side). The closure report of the Deputy Superintendent of Police, District Crime Branch dated 17.04.2025 and the report of the Additional Superintendent of Police, Cyber Crime dated 15.05.2025 [extracted above] confirm huge transaction of money with deception. This Court is not going into the merits of the contentions and the rival contentions.

8.The undisputed fact is that the petitioner attempted to commit suicide, she was rushed to the Government Medical College and Hospital, Tiruvallur where she was admitted on 11.04.2025 at about 12.10 p.m., in the Accident Register the ligature mark confirming the suicide is recorded, thereafter a requisition was made for recording dying declaration, the learned Judicial Magistrate, Fast Track Court (Magisterial Level), Tiruvallur came to the Hospital and recorded the dying declaration of the petitioner in the presence of duty Doctor Harikumar. Hence, there is a prima facie



https://www.mhc.tn.gov.in/judis

WEB COPY



material available for registration of a case.

9.On the contrary, it is shocking to know that based on the legal opinion obtained from one Mr.V.S.Eswaran, Pleader doing Government Work, Additional District Munsif Court, Tiruvallur, who opined that *"Hence I am of the opinion the complaint was not a fit case to register the FIR and it attracts civil in nature. Hence the complaint is liberty to seek the remedy before the civil court in accordance with law"*, the case was closed at the CSR stage itself which is improper.

10.Since there is a dying declaration recorded by a Magistrate which is a prima facie material to register a case, the Police ought to have registered FIR and conducted investigation in this case. It appears that after the suicide attempt by the petitioner, the District Crime Branch closed the complaint and the Additional Superintendent of Police submits a report. There seems to be some clouded mystery. Hence, this Court is inclined to set aside the closure reports.

11.Accordingly, the closure reports dated 16.04.2025 and 17.04.2025



https://www.mhc.tn.gov.in/judis

WEB COPY



of the District Crime Branch and Action dropped report of C.S.R.No.373 of 2025, all set aside, FIR to be registered and investigation to be conducted in a composite manner by an Officer not below the rank of Deputy Superintendent of Police preferably an Officer, not involved in any of the above enquiry so far conducted. The Inspector General of Police, North Zone to monitor the investigation.

9.In the result, the Criminal Original Petition stands allowed.

21.05.2025

Index: Yes/No
Speaking Order/Non-Speaking Order,
Neutral Citation: Yes/No
*cse*



https://www.mhc.tn.gov.in/judis

WEB COPY



To

1.The Superintendent of Police,
Thiruvallur District,
Thiruvallur.

2.The Assistant Superintendent of Police,
CBCID,
Chennai.

3.The Deputy Superintendent of Police,
DCB – Thiruvallur,
Thiruvallur District.

4.The Sub-Inspector of Police,
DCB – Thiruvallur,
Thiruvalllur District.

5.The Inspector General of Police,
North Zone, Chennai.

6.The Public Prosecutor,
High Court, Madras.



https://www.mhc.tn.gov.in/judis

WEB COPY



M.NIRMAL KUMAR, J.
*cse*

Pre-delivery order made in

Crl.O.P.No.15442 of 2025

21.05.2025



https://www.mhc.tn.gov.in/judis